கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர்(பொவிதி), பிரதம பண்டகசாலைகள்(வடக்கு)

அவர்களின் செயல்முறை ஆணை

முன்னிலை:– திருமதி. க பத்மஜா, பி. காம்.,
துணைப்பதிவாளர்(பொவீதி)
(முழுக்கூடுதல் பொறுப்பு)

-----

ந.க.எண் 268/ 2019 அபஅ நாள்: 02. 11.2021

பொருள்: பணியமைப்பு – நேரடி நியமனம்– தொகுதி IV (2015–16, 2016–17 மற்றும் 2017–18) திரு. ப்பி. செல்வராசு, த/பெ. திரு. பூச்சி, இளநிலை உதவியாளர் . பணி வரன் முறை செய்தல் – ஆணைகள் பிறப்பிக்கப்படுதல்.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதம் எண்.1017/PSD-G/2019 நாள். 30.03.2019.
2. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கடிதம் ந.க83453/2018 பதொ3 (3) நாள்.28.05.2019.
3. இணைப்பதிவாளர் (பொவிதி)1 அவர்களின் செயல்முறை ஆணை ந.க. 1183/2018 அபஅ நாள்.04.06.2019.
4. திரு.ப்பி.செல்வராசு, இளநிலை உதவியாளர் பணிசேர் அறிக்கை நாள். 07.06.2019.
5. அரசுக் கடிதம் எண். 11020/CV-6/2019.-3 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நாள்.23.04.2021.
6. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதம் எண்.1017/PSD-G2/ 2019 நாள். 08.10.2021.
7. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் கடிதம் ந.க 40695/2019 பதொ3 நாள். 21.10.2021.
8. இணைப்பதிவாளர் (பொவிதி)1 கடிதம் ந.க. 52/2021 அபஅ நாள்.29.10.2021.

***********

ஆணை:–

தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி IV தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணியில் துணைப்பதிவாளர் (பொவிதி) பிரதம பண்டக சாலைகள் (வடக்கு) அலுவலகத்தில், இளநிலை உதவியாளராக பணியமர்த்தம் செய்யப்பட்டு 07.06.2019 முற்பகல் முதல் பணியாற்றி வரும் திரு. ப்பி. செல்வராசு அவர்களின் பணிகள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் ந.க. 1017//PSD-G2-2019 நாள்.08.10.2021–இன்படி அரசுப் பணியில் சேர்ந்த நாளான 07.06.2019 முற்பகல் முதல் விதிகளுக்குட்பட்டு வரன்முறை செய்யப்படுகிறது.

துணைப்பதிவாளர் (பொவிதி)
பிரதம பண்டகசாலைகள் (வடக்கு)
சென்னை – 600 001

Scanned with CamScanner

2. இவரது பணிவரன்முறை மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற சென்னை மற்றும் மதுரை கிளையில் 2015–2016, 2016–2017 மற்றும் 2017–2018–ம் ஆண்டுகளுக்கு தேர்வாணையத்தால் தொகுதி (4)ன்கீழ் தெரிவு செய்யப்பட்ட பணிகளின் தொடர்பில் நிலுவையுள்ள நீதிப்பேராணை மனுக்களின் இறுதி முடிவுக்கு உட்பட்டது.

3. இவர் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாளான 07.06.2019 முதல் இவரின் தகுதிகாண் பருவம் தொடங்குகிறது. பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டு பணி காலத்தில் இரண்டு ஆண்டு தகுதி காண் பருவத்தை இவர் நிறைவு செய்ய வேண்டும். தகுதிகாண் பருவ காலத்தில் இவரது பணி அல்லது நடத்தை மன நிறைவு அளிக்கவில்லையெனில் நிர்ணயிக்கப்பட்ட தகுதிகாண் பருவம் முடிவடையும் முன்பே இவரது தகுதிகாண் பருவ காலம் முடிவுக்கு கொண்டு வரப்படும்.

4. தகுதிகாண் பருவகாலத்தில் பவானி சாகரில் உள்ள அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியினை இவர் மேற்கொள்ள வேண்டும். அப்பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் தேர்வுகள் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் ஆகிய தேர்வுகளில் தேர்ச்சி பெறவேண்டும்.

2.11.2021

துணைப்பதிவாளர் (பொவிதி)
பிரதம பண்டக சாலைகள் (வடக்கு)

0211

பெறுநர்

திரு. பூ. செல்வராசு,
இளநிலை உதவியாளர்
துணைப்பதிவாளர் (பொவிதி)
பிரதம பண்டக சாலைகள் (வடக்கு)

நகல் : இணைப்பதிவாளர் (பொவிதி)1, சென்னை
அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது

நகல் :: இருப்புக் கோப்புக்கு

Scanned with CamScanner